**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Education in Tamil Literature

**Dr. M. Dhoulath Begum**, Head & Assistant Professor of Tamil, M.S.S. Wakf Board College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-1269-0593**
**DOI: 10.5281/zenodo.6621393**

## Abstract

*In Tamil Literature, when we notice educative classifications, the kings not only inculcate intellectual facts and practices but also educational wisdom through literature. When we consider poets, they indicate not only pedagogical characteristics but also their implications. Nedunchezhiyan, the king who defeated Aryan Army, transforms into a poet, and champions the notion that poets should be patronized to learn good and intensive education through the poem 'utruli vuthaviyum uru porul koduthum'. One should get an education by helping the teacher, by means of helping him come out of disaster, giving financial assistance and without digressing from the state of respect. Moreover, education is not only for one person and one caste. It is common for everyone in the world. wherever the educationists go, they are respected by all. Teachers are respected and cared for in any situation, and this is the main theme of this article.*

**Keywords:** Avvai Tamil Maalai, Sanga Tamil Nuulgal, Thirkkural, Vetri Verkai.

.

## References

[1] *Avvai Tamil Maalai*, Editor. Sudarmani Kavingar Vembathur Krishnan, First Edition: 2007, Sudarmani Publication. 19, Bajanai koyil street, Choolai, Chennai – 600094.
[2] *Sanga Tamil Nuulgal*, Aathiraiyar, First Edition: 1987, Swami Malai Publication. 2, Muthu Krishnan Street, T.Nagar, Chennai – 600017.
[3] *Thirkkural*, Editor. S. Subash Chandra Bose, Second Edition: 2020, Thoppul Pillaiyar Koyil street, Thanjore – 613001.
[4] Vetri Verkai, Athi Veera Rama Pandian, Online PDF, Chennai Library.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் இலக்கியங்களில் கல்வி

**முனைவர் மீ.தௌலத்பேகம்**, தமிழ்த்துறைத்தலைவர், மு.சா.ச. வக்பு வாரியக்கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-1269-0593
DOI: 10.5281/zenodo.6621393

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்களில் கல்வி வகைமை நோக்கில் சமூகத்தில் அறிவுச்சார்ந்த கருத்தாக்கங்களை மட்டுமல்லாமல், அறிவு சார்ந்த மாண்புகளை மட்டுமல்லாமல் இலக்கியங்கள் மூலமாக கல்வியினுடைய மாண்புகளை எடுத்து இயம்பக்கூடிய உயர்ந்த தன்னை உடையவர்களாக அக்கால அரசர்களும் திகழ்ந்துள்ளார்கள். புலவர்களைப் பொருத்தவரை கல்வியினுடைய மாண்புகளையும், உயர்வுகளையும், சுட்டிச் செல்வது மட்டுமல்லாமல் அதன் வழிமுறைகளை இயல்பாக எடுத்துக் காட்டுவதைக் காணமுடிகின்றது. ஆரியப்படைக் கடந்த நெடுஞ்செழியனின் எனும் மன்னன் தானே புலவனாக மாறி உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் என்ற பாடலின் கருத்தாக்கத்தை அடிப்படையாக் கொண்டு கல்வியை சிறந்த முறையில் கற்றுக் கொள்வதற்காக, ஆழ்ந்து கல்வியைப் பெறுவதற்காக கல்வியாளர்களுக்கு நல்ல உதவியைச் செய்து கொடுங்கள். கல்வியாளர்களாக இருக்கக் கூடிய ஆசிரிர்களின் வாழ்க்கைக்காக உயர்ந்த உறுதியைச் செய்து கொடுங்கள் என்று பதிவிடுகின்றார்.மேலும் கல்வி என்பது ஒருவருக்கு மட்டும் உரியதல்ல, ஒரு குலத்திற்கு மட்டும் உரியதல்ல, மாறாக கல்வி என்பது உலக சமூகத்தில் அனைவருக்கும் பொதுவானது.கல்வியைப் பெறக் கூடியவர்கள் எந்த திசைச்சென்றாலும் அவர்கள் போற்றப்படக் கூடியவராக, பாதுகாக்கப்படக் கூடியவராக இருக்கின்றார்கள்.கல்வியாளர்கள் எந்த தருணத்திலும், எச்சூழ்நிலையிலும் சிறந்த முறையில் போற்றப்படுவார்கள்.சிறந்த முறையில் பாதுகாக்கப்படுவார்கள் என்பதையும் இங்கு பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** தமிழ், இலக்கியங்கள், சங்கத்தமிழ் மாலை, திருக்குறள், கல்வி

**முன்னுரை**

உலகம் கல்வி எனும் இயக்கத்தில் தன்னை முழுமையாக சுழல வைக்கக் கூடிய பரந்துபட்ட சுழற்சி.சங்க காலம் முதற்கொண்டு இன்றைய காலம் வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டு இருப்பதை நம்மால் காண முடிகின்றது. இலக்கியமும் கல்வியும் வெவ்வேறு அல்ல. மாறாக, இரண்டும் ஒரேதளத்தில் இயங்க கூடிய ஒரு இயங்கு தளமாகும். நல்ல கல்வியாளர்கள் சிறந்த இலக்கியங்களை புலமைத்தன்மையோடு படைத்தளிக்கக்கூடிய படைப்பு அமைவு தான் இலக்கியங்கள். இலக்கு எப்படி இலக்கியமாக இயம்புமோ அது போல சிறந்த ஞானத்தை, இலக்கை எடுத்துச் சொல்லக் கூடியது தான். நம் உள்ளத்தில் எப்போதும் கலந்து இருக்கக் கூடிய மெய்ம்மைத் தன்மையை, அறிவுத்தன்மையை மேம்படுத்தக கூடிய கல்வியை இலக்கியங்கள் சிறந்த முறையில் பறைச்சாற்றி நிற்கின்றன. கல்வியினுடைய சிறப்பையும், உயர்ந்த மாண்பையும் புலவர்கள் மட்டுமல்ல, அரசர்களும் சிறந்த மையப் பொருளாகக் கொண்டு கருத்தைச் சொல்லக்கூடிய கருத்துப்பதிவையும் அது சார்ந்த சில

கருத்தாக்கங்களையும் இக்கட்டுரையில் ஆய்வதோடு கல்வியின் மேன்மைகளையும், சிறப்புக்களையும் எடுத்து இயம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கியமும் இலக்கிய வாழ்வியலும்**

சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை நவீன காலம் வரை ஒவ்வொரு இலக்கியங்களும், ஒவ்வொரு விதமான வாழ்வியலைக் கற்றுத்தந்து கொண்டே இருக்கின்றது. ஒருமனிதன் தன்னுடைய தொடக்க காலம் தொடங்கி தன்னுடைய இறுதி காலம் வரை எப்படிப்பட்ட வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு சான்றாக இலக்கியங்கள் திகழ்ந்து கொண்டு வருகின்றது எனவே, இலக்கியங்களும், வாழ்வியலும் மிக ஒன்றிணைந்து, பின்னிப்பிணைந்த ஒரு வரலாற்றுப பயணம் என்று கூறலாம் இப்படிப்பட்ட இலக்கிய தருணங்கள், வாழ்வியலுக்கான முன்னுதாரங்களை எடுத்தியம்புகின்றது. அகமும் புறமும் கலந்து வாழ்வினுடைய நிலைகளை எடுத்துச் சொல்லக்கூடிய இலக்கியமாக தமிழ் இலக்கியம் திகழ்கின்றது என்று தான் கூற வேண்டும். ஆக இலக்கியத்தினுடைய, வழித்தடங்களும், பயணங்களும் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன எனவே இலக்கியங்கள் இலக்குகளை இயம்புவது மட்டுமல்லாமல், இலக்குகளுக்குத் தேவையான அத்தனை வகையான பயணத்தையும் அமைத்து தருவதாக அமைகின்றது.

**இலக்கியம் கற்றுத்தரும் கல்வி**

இலக்கு + இயம் = இலக்கியம் என்ற எதார்த்தச் சொல் கல்வியையும், கல்விச்சார்ந்த உயர்ந்த மாண்புகளையும் எப்போதும் கற்றுத்தந்து கொண்டே இருக்கும். பொதுவாக சங்ககாலம் தொடங்கி நீதி இலக்கிய காலம், பக்தி இலக்கியகாலம், தற்காலம் என்று அனைத்து வகையான பயணங்கள் கல்வியை பறைசாற்றிக் கொண்டு செல்லக்கூடிய படைப்பாக்கம் என்றுதான கூறவேண்டும். அந்தவகையில் எத்தனையோ புலவர்களும் அறிஞர்களும் தங்களுடைய வழிகளைக் கொண்டு பிறந்த கல்விச் சார்ந்த அந்த கல்விக் குறித்தப் பதிவுகளை பதிவிட்டுச் சென்று இருக்கிறார்கள். பொதுவாக, குறிஞ்சிக்கு கபிலர், முல்லைக்கு பேயனார், மருதத்திற்கு ஓரம்போகியார் நெய்தலுக்கு அம்மூவனார் பாலைக்கு பாலைகடுங்கோ செல்வவாழியதனார், என்று தங்களுடைய ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு புலவர் கல்வி இலக்கியம் குறித்து சிறந்த ஆளுமைகளை வெளிப்படுத்திக் கொண்டே செல்லக் கூடியவர்கள். இலக்கியம் என்பது சாதாரணமான ஒன்று அன்று.அது கல்வியைச் சிறந்த வழி முறையில் கற்றுத் தரக்கூடிய, கல்வியை சிறந்த முறையில் வெளிப்படுத்தக் கூடிய ஒரு படைப்பாக்கம் ஆகும். படைப்பாளர்களாக இருக்க கூடியவர்கள் புலவர்கள் மட்டுமல்ல. அரசர்களும் கூடசில தருணங்களில் தங்களது சிறப்புக்களை போரின் வெளிப்பாடுகளாக மட்டுமல்லாமல் கல்வியின் வெளிப்பாடாக பதிவு செய்து இருப்பது நாம் அறிந்த ஒன்று. இலக்கியம் எந்தெந்த தளங்களில் எல்லாம் கல்வியைப் புகட்டவேண்டும்.

**“கண் உடையவர்கள் கற்றவர் தாமே” (கல்வியொழுக்கம், பாடல் 13)**

என்று ஔவையாரும்,

**“கண்ணுடைய ரென்பவர் கற்றோர்; முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்”** (குறள்: 393)

கற்றோரிடம் இருப்பது மட்டுமே கண்கள் என்றும், கல்லாதவர்களிடம் உள்ள கண்கள் புண்களாகும்.என்ற வார்த்தைகளைப் பல தருணங்களில் பதிவிட்டு செல்கின்றது. ஆகவே கல்விக்கான சிறந்த பதிவுகளை வள்ளுவரும் கல்வி, கேள்வி அதிகாரத்தின் மூலமாகவும், இன்னும் சில தருணங்களில்

ஔவை போன்ற பெண்பாற் புலவர்களும் கல்வி குறித்த ஏலாதி, நான்மணிக் கடிகையிலும், மூதுரையிலும் அதிகதிமான கருத்தாக்கங்களை பதிவிட்டுக் கொண்டே செல்கின்றனர். ஆகவே கல்வி என்பது சாதாரணதளத்தில் பயணப்படக் கூடியதன்று. மாறாக சிறந்த புதியதளங்களை உருவாக்கித் தரக் கூடியது.

**ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் கல்விக்குறித்த கருத்தாக்கம்:**

தலையானங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் அல்லது ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று பல்வேறு பெயர்களால் புலமையோடு அல்லது வீரத்தோடு அழைக்கப்படக்கூடிய படைப்பாளர், மற்றும் சிறந்த போர்வீரர் ஆரியப்படை மன்னன் ஆவார். இவர்காணாத போர்க்களங்கள் இல்லை. இவர் எதிர்த்து போரிடாத பகைவர்களே இல்லை.இவர் அத்தனைப் போர்களத்தையும் தனக்கான தன் நாட்டிற்காக சமர்ப்பணம் செய்யக்கூடிய சிறந்த ஒரு மன்னர்.சில தருணங்களில் தானே புலவராகவும் பாடி இருக்கின்றார். ஒரு சிறந்த போர் வீரனால் நல்ல புலவனாகவும் மாற முடியும். தன் கைகளால் கொண்ட வாளின் கூர்மையால் எப்படி வெற்றியை தன்நாட்டிற்காக பெற்றுத் தரமுடியுமோ அதுபோல தன் கையில் உள்ள தூரிகையைக் கொண்டு சிறந்த இலக்கியத்தை, புலமையை தன்னால் உருவாக்க முடியும் என்பதை தன் படைப்புத் திறனால் பதிவு செய்தவர் ஆரியப்படைகடந்த பாண்டிய நெடுஞ்செழியன் பொதுவாக ஒரு மன்னன் நாட்டினுடைய நிர்வாகத்தைப் பற்றி, நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி, நாட்டின் வரவுகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கக் கூடிய, செயலாற்றக் கூடியவனாகத்தான் இருப்பான். ஆனால் மன்னனுக்கு, பொருளாதாரத்தையும், வருவாயையும் தாண்டி தன் மக்கள் சார்ந்த, மக்களின் அறிவுச்சார்ந்த எண்ண வளர்ச்சிகள் சிறந்த நெஞ்சு உடையவனாக இருப்பான் என்பதற்கு நற்சான்றாக, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஒருநல் உதாரணமாக இருக்கின்றான்.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்புஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்” (புறநானூறு, பாடல் 183)**

எனும் வரிகள் அவனது உள்ளம் சார்ந்த உட்கருத்தை வெளிப்படுத்தக் கூடிய வரியாகத் திகழ்கின்றது. ஒருவன் வாழ்வில் எத்தனை செல்வத்தை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம் பெற்றச் செல்வம் அவனை தன்னோடு வைத்துக் கொள்ளும்.சில தளங்களில், சில காரணிகளால் அவனை விட்டு விலகும். ஆனால் ஒரு மனிதனை விட்டுச் செல்லாத ஒரே ஒரு செல்வம் கல்விச் செல்வம் ஆகும் இப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை உங்களுக்கு பாடம் கற்றுத் தரும் ஆசிரியருக்கு எப்போதெல்லாம் துன்பம் ஏற்படுகின்றதோ, அப்போது மாணவர்களாகிய நீங்கள் ஆசிரியருக்கு உதவ வேண்டும். உங்களுக்கு எப்போதுமே கல்வியைக் கற்றுத் தரக்கூடிய ஆசிரியரிடம் அன்பாகவும் ஆதரவாகவும், எப்போதும் கூடவே உடன் இருக்க வேண்டும் என்பதை பதிவு செய்கின்றார். ‘உற்றுழி உதவியும்’ என்னும் வரி மாணவர்களை சார்ந்தது அல்ல மாறாக மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் என்னவெல்லாம் செய்யலாம் மாணவர்களை மட்டுமல்ல. இந்த ஆசிரியர்களை சுற்றி இருக்க கூடிய இந்த சமூகம் ஆசிரியர்களுக்காக என்ன செய்யலாம், செய்து கொடுக்கலாம் என்பதை இந்த வரிகள் பதிவிட்டுக் காட்டுகின்றது. போற்றப்படக்கூடியது கல்வி

என்றால், போற்றப்படக் கூடியவர் ஆசான்கள்.இப்படிப்பட்ட ஆசான்களுக்கு துன்பம் நேரும் காலத்தில் அவர்களுக்கு உதவவேண்டும்.

அவர் துன்பப்படக்கூடிய நிலையில் அவருக்கு நிறைந்த செல்வத்தை கொடுத்து அவருடைய வறுமையைப் போக்க வேண்டும்.அவர் கற்றுத்தரக்கூடிய சிறந்த வழிமுறையை எப்போதும் தவற விடக்கூடாது.வாய்மையுடைய அவரது வார்த்தைகள் வாய்மையுடைய அவரது வரிகள் எப்போதும் நம் மனதில் நிலைத்திருக்க வேண்டும்.இப்படி நிலைத்திருந்தால் மட்டுமே நாம் அவர் கற்றுத் தரக்கூடிய வார்த்தையின் மூலமாக வாய்மையின் வழிமுறையில் நம்மால் நடந்து கொள்ள முடியும். அவரைப் பின்பற்றி நடப்பதற்கு ஒருநாளும் மாணவர்கள் தயங்கக்கூடாது சிறந்த ஆசான்களை ஒருபோதும் மாணவர்கள் கைவிடக்கூடாது என்பதாக ஆசிரியர்களின் சிறப்புக்களை, ஆசான்களுடைய உயர் மாண்புகளை ஒரு அரசன் பதிவிடக் கூடிய இந்த பதிவு சிறந்தது. மேலும்,

**“ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறுஅரசும் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே” (புறநானூறு, பாடல் 183)**

என்ற வார்த்தை ஆசிரியர்களை கண்ணியப்படுத்தி அவர்களிடமிருந்து பெறக்கூடிய இக்கல்வி மாணவனை மிகச் சாதாரணமாக விட்டு விடாது. ஆந்த மாணவனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும். எந்த அளவிற்கு என்றால் ஒரு குடியில் பிறந்த மக்களுக்கு மத்தியில் மூத்தோன் தான் அரசாட்சி செய்ய வேண்டும்” என்ற நியதியை மாற்றி இந்த கூட்டத்தில் யார் அறிவுடையவன் அந்த அறிவுடையவனுக்கு அரசன் அரசு கொடுக்கலாம் என்ற வார்த்தையை எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பாக கல்வி அமைந்து விடும். அப்படிப்பட்ட அந்தக் கல்வியை ஆசான் மூலமாக பெற்றுக் கொண்ட ஒரு மாணவன்.

அரசன் ஆவதற்கான தகுதியைப் பெறுகிறான். இப்படி அவன் அரசன் ஆகிவிடக் கூடிய நிலையில், நிச்சயமாக அவன் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுள் மூத்தோன், இளையோன் என்ற பேதமில்லாமல் கற்றோன் யார் என்ற பார்வையில் தான் பார்க்கப்படுகிறான் என்று ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனுடைய வரிகள் நம்மிடையே சிறந்த முறையில் எடுத்து இயம்புகின்றது. அதுமட்டுமல்லாமல் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே என்ற இந்தவரி உண்மையில் இன்றைய தலைமுறையினருக்கு மிக பொருத்தமான ஒருவரி. சாதிய நிலையில், சாதிய அமைப்பில் கட்டுண்டு கிடக்கக் கூடிய இந்த சமுதாயம் எந்த வகையிலும் எந்த சூழலிலும், மேற்பால் உள்ளவனே ஆளக் கூடியவன், கீழ்பால் உள்ளவன் அவனுக்கு என்றும் அடிமையாய் உள்ளவன் என்ற நிலையை மாற்றுவதற்காக கொண்டுவரப்பட்ட ஆயுதமே கல்வி என்று கிட்டதட்ட 1800 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியங்களில் பகுத்து தரப்பட்டுள்ளது. ஆரியப்படைக் கடந்த நெடுஞ்செழியனால்.கீழ்பால் ஒருவன் கற்றுக்கொண்டால், கீழ்ப்பால் ஒருவன் அறிவைப் பெற்றும் கொண்டான் என்றால் மேற்பால் ஒருவன் அவனிடம் மாணவனாகவே மாறலாம்.ஆக, கீழ்ப்பால் ஒருவன் தன் அறிவை மேம்படுத்தக் கூடிய ஆசானாக உயர்ந்து விட்டால் மேற்குடியில் இருக்கக் கூடியவன் இவன் கீழ்க்குடியில் இருக்கக் கூடியவன். இவனிடம் நான் கல்வி

கற்க மாட்டேன் என்றெல்லாம் கூறமுடியாது.கல்வி என்பது சாதியத்தையும், இடத்தையும் கடந்து உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கின்றது என்பதை சிறந்த முறையில் நெடுஞ்செழியன் பதிவிட்டு காட்டுகின்றார்.

**ஔவையார் காட்டும் கல்வியின் மாண்பு:**

உலகில் சிறந்த தத்துவத்தையும், தத்துவார்த்தத்தையும் எடுத்து இயம்பக்கூடிய அந்த தன்மை மூத்தமக்களுக்கு மத்தியில் மட்டுமே உள்ள ஒரு சிறப்பம்சமாகும். ஆக, ஔவை எனும் இச்சொல் தாய் எனும் சொல்லுக்கு நிகரான வார்த்தை என்பதாக பல தளங்களில் கட்டமைக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட ஔவையார் கல்வியின் சிறப்புகளையும் மேன்மைகளையும் தன்னுடைய பாடல் வரியின் மூலமாக பதிந்து காட்டுகின்றார். அந்த வரன்முறையில் **“ஓதுவது ஒழியேல்”** (ஆத்திச்சூடி. பாடல்.11) என்ற ஔவையின் ஆத்திச்சூடியின் கருத்து வாழ்வில் ஒருபோதும் ஓதுவதை, படிப்பதை ஒழித்து விடாதீர்கள், அழித்து விடாதீர்கள்.குறிப்பாக, மாணவர்கள் ஓதுவதை கைவிட்டு விடாதீர்கள். ஏனென்றால் ஓதுவது என்பது ஒளியைத்தரக் கூடியது.புடிப்பது என்பது வாழ்க்கையில் வெளிச்சத்தை ஏற்படுத்தக் கூடியது.ஒளி என்னும் வெளிச்சத்தை ஒழித்து விடாதீர்கள். மேம்படுத்திக் கொள்ளுங்கள் என்றவரி கல்வியின் சிறப்பை மேம்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. மேலும்,

**“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”** (கொன்றை வேந்தன். பாடல் 7) என்னும் வரி, உலகில் எண்ணும் எழுத்தும் தவிர்த்தால் வேறு எதுவும் உலகில் புலப்படாது.கல்வி அறிவு அற்றோர்கள் இவ்வுலகில் எந்தவிதமான சிறப்பையும் அடையப் போவது இல்லை. கல்வி உடையவர்கள் தான் சிறப்பை அடைய முடியும்.கல்வி என்பது என்னும் எழுத்துமே ஆகும். வலது கண்ணும், இடது கண்ணும் எப்படி அவசியமோ அதை போலதான் எண்ணும் எழுத்தும் என்பதை பதிவிட்டு காட்டுகின்றார் ஔவையார்.

**அதிவீரராம பாண்டியர் காட்டும் கல்வி:**

**“கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சைப் புகினும் கற்கை நன்றே” (வெற்றிவேற்கை, பாடல் 35)**

என்ற பாடல்வரி வெற்றிவேற்கை வாயிலாக அதிவீரராம பாண்டியர் பதிவிடக் கூடிய அந்த பதிவு ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனின் பாடல் வரிகளோடு ஒப்புமை காண்பதோடு, நல்லதொரு வளத்தையும் தரக்கூடியதாக இருக்கின்றது. இவ்வுலகில் எதை வேண்டுமானாலும் எளிதில் பெற்றுக் கொள்ளலாம். தேடலின் காரணமாக ஆனால் எளிமையாக பெறக்கூடிய ஒன்றை கடினப்பட்டு, அதன் மீது அச்சம் கொண்டு தள்ளிவைத்தால் அது நம்மை காலத்திற்கும் வந்து சேராது என்ற ஒன்று இருக்குமென்றால் அது கல்வி மட்டுமே. அந்த கல்வியை பிச்சைப் புகினும் கற்கை நன்றே.பிச்சை எடுத்தாவது, யாசகம் பெற்றாவது அந்த கல்வியை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்.அந்த கல்வியினுடைய காலக்கட்டத்தில் எவ்வளவு சிரமம் பெற்றாலும் சரி அந்த கல்வியை நீங்கள் மேம்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் அந்தக் கல்வி உங்களுடைய வாசலுக்கு வராமலே போய்விடும் என்பதாக சிறந்த வரியின் மூலமாக அதிவீரராம பாண்டியர் பதிவிட்டுக் காட்டுகின்றார். ஆக கல்வி குறித்து இலக்கியங்கள் காலந்தோறும் நவின்று கொண்டே வருகின்றது.

**முடிவுரை**

இலக்கு+இயம் என்ற வார்த்தை காலந்தோறும் ஒரே அமைப்பு முறையில் அமைப்பு ரீதியாகப் பயணப்பட்டாலும் அந்த இலக்கு நமக்கு கற்றுக் கொடுக்கக்கூடிய ஒரே கருத்தாக்கம் கல்வி.

ஆசு+இரியர் என்ற கருத்தாக்கத்தில் குற்றத்தைக் களையக் கூடிய, குற்றம் இல்லாமல் ஆக்கக் கூடிய, ஆசிரியர் தரக்கூடிய கல்வி எந்த நிலையிலும் பழுது போகாது. மாணவர்களின் மத்தியில் வந்தால் அம்மாணவச் சமுதாயம் மேம்பட்ட நிலையில் நல்லதொரு நிலையை அடைந்து கொள்ளும். ஆக அந்த நிலை அடைந்து கொள்ள வேண்டும் என்றால் இலக்கியங்கள் கூறக்கூடிய வழிமுறைகளை சீரிய முறையில் வாழ்வியல் முறையில் கொண்டு வந்தால் ஆசிரியர்களுடைய மாண்புகள் உடைய கற்றல் முறை நம்முடைய உள்ளத்தில் சிறந்த பதிவுகளைக் கொடுக்கின்றது. மேலும் இலக்கியம் காட்டக்கூடிய சிறந்த முடிவுகளை அடையமுடிகின்றது என்பதே இக்கட்டுரையின் கருத்தாக்கம் என்று கூறலாம்.

**துணை நூற்பட்டியல்**

[1] ஔவைத் தமிழ் மாலை, உரையாசிரியர். சுடர்மணிக் கவிஞர், வேம்பத்தூர் கிருஷணன், முதல் பதிப்பு: 2007, சுடர்மணி பதிப்பகம், சென்னை- 600 094.

[2] சங்கத் தமிழ் நூல்கள், ஆதிரையார், முதற்பதிப்பு: 1987, சுவாமி மலை பதிப்பகம், சென்னை- 600 017.

[3] திருக்குறள், உரையாசிரியர். ச. சுபாஷ சந்திர போஸ், இரண்டாம் பதிப்பு: 2020, தொப்புள் பிள்ளையார் கோயில் தெரு, தஞ்சாவூர்- 613 001.

[4] வெற்றி வேற்கை, அதிவீரராம பாண்டியர், சென்னை நூலகம் வெளியீடு, (இணையவழி).

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.